★★
Registered as a Newspaper in Ceylon — விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 — EELA NADU — இதழ் 166

National Tamil Daily — தேசிய தினசரி

(28-7-65)

விசுவாவசு ஆடி 13 ரபி அவ் பிறை 28 புதன்கிழமை

26 வது ஆண்டுவிழாவை முன்னிட்டு
அரைச்சலார்
28-6-65 முதல்
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

## காலியான இடங்கள்: 5000
### விண்ணப்பித்தவர் தொகை: 1,00,000

கொள்ளுப்பிட்டி, செவ்
இலங்கைப் போக்குவரத்து சபையில் காலியான இடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

காலியான இடங்கள்: 5,000 இதுவரை விண்ணப்பித்திருப்பவர்கள் தொகை: 1,00,000 (ஒரு லட்சம்)

காலியான இடங்கள்: பஸ் சாரதிகள், கண்டக்டர்கள்,

(6-ம் பக்கம் பார்க்க)

# துண்டுவிழும் தொகை 61 கோடி 66 லட்சம் ரூபா

## வித்தியாதிபதிக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு
### ஜாதிக குரு சங்கமய விரைவில் தொடரும்

கொழும்பு, செவ்

ஜாதிககுரு சங்கமய, வித்தியாபதிக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தாக்கல் செய்யவிருக்கின்றது. சங்கத்தின் உபவிக் காரியதரிசி திரு ரத்னசேலையை கொழும்பிலிருந்து இடமாற்றம் செய்ததை ஆட்சேபித்தே வழக்குத்தொடரவிருக்கின்றது. திரு. ரத்னசேலியின் இடமாற்றத்தை ரத்துச்செய்யக் கோரும் வழக்கு விரைவில் தாக்கல் செய்யப்படவிருப்பதாக குருசங்கமயவின் காரியதரிசி திரு என் ஆரியவம்சா தெரிவித்தார்.

தொழிற்சங்கவாதியின் இடமாற்றம் செய்வது சம்பந்தமான திணைக்களத்தின் சட்டத்தை மீறியுள்ளதாகவே வித்தியபதி மீது வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனவும் தேசத்துரோகமான வகையில் வித்தியாதிபதியின் நடவடிக்கை இருப்பதாகவும் திரு ஆரியவம்சா தெரிவித்தார்.

திரு. ரத்னசேலியும் அரசியலில் தீவிர பங்குகொண்டார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். தங்கள் தொழிற்சங்கத்தின் உத்தியோகத்தர்களில் 50 பேருக்குமேலானோரை அவர்கள் தொழிற்சங்க வேலையில் ஈடுபட முடியாத இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதாகவும் திரு. ஆரியவம்சா தெரிவித்தார்.

## ரூ. 7000 பெறுமதியான பொருள்கள் கள்ளக்கடத்தல்
### கரையூர் பொலிஸார் கைப்பற்றினர்

யாழ்ப்பாணம் புங்குடுதீவிலிருந்து படகொன்றில் கள்ளக்கடத்தல் செய்து வரப்பட்ட 7000 ரூபா பெறுமதியான ஐம்பொன்னாலான காதணிகள், திருஉருவச் சிலைகள், தேசிய தலைவர்கள், சினிமா நடிகர்களின் படங்கள் ஆகியவைகளை வடபகுதி உதவி சுப்பிரிண்டன் திரு ஏ.ஜே. இடமல்கொட, கரையூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சார்ஜன்ட் பி எஸ். சிவஞானம் ஆகியோரின் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியொன்று பாலையூர் வெளிச்சவீட்டுக்கு சமீபத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை கைப்பற்றியது.

படகையும் பொருள்களையும் பொலிஸார் அரசாங்க அதிபர் திரு நெவில் ஜெயவீராவிடம் ஒப்படைத்தபோது படகும் பொருள்களும் பறிமுதல் செய்யப்பட்டன. படகில் வந்தவர்கள் பொருள்கள் தமதில்லையென்றதைத் தொடர்ந்து அவர்கள் மீது எதுவித வழக்கும் தொடரப்படவில்லையென அறியப்படுகிறது.

கல்விமந்திரி மீது அவநம்பிக்கைப்பிரேரணை

## இன்றும் நாளையும் விவாதிக்கப்படும்

கொழும்பு, செவ்வாய்

கல்வி மந்திரி மீது எதிர்க்கட்சியினர் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் நாளை புதன்கிழமையும், மறுநாள் வியாழக்கிழமையும் நடைபெறும் இருதினங்களை விடுத்து ஒரே தினத்தில் விவாதிக்க வேண்டுமென்ற ராஜாங்க மந்திரியின் யோசனை சபாநாயகர் தலையிட்டதன் பேரில் கைவிடப்பட்டது.

கல்வி, கலாச்சார அமைச்சர் திரு ஐ எம் ஆர் ஏ இரியகொலை மீது எதிர்க்கட்சியினர் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதிப்பதற்கு இரண்டுதினங்களை ஒதுக்குவது சாத்தியமில்லையென்றும் நாளை ஒரு தினம்மட்டும் அந்த விவாதத்திற்குப் போதுமென்றும் ஜனப்பிரதிநிதிகள் சபை இன்று பிற்பகல் கூடியபோது ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர் ஜயவர்த்தன சபையில் தெரிவித்தார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## உத்தேசவருமானம்: ரூ. 188 கோடி
## உத்தேச செலவினம்: ரூ. 250 கோடி
### வெளிநாட்டு நிதிஉதவிகளின் மூலம் துண்டுவிழும் தொகை ஓரளவு குறையலாம்

கொழும்பு, செவ்வாய்

**தேசிய அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத் திட்டத்தில் 61 கோடியே 66 லட்சத்து 53 ஆயிரத்து 505 ரூபாய் துண்டுவிழும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

1965 66 ம் நிதி வருடத்தில் 250 கோடியே 05 லட்சத்து 03 ஆயிரத்து 158 ரூபாய் (ரூ 250,05,03,158) தொகை செலவு ஏற்படுமென்றும் வருமானமாக 188 கோடியே 38 லட்சத்து 49 ஆயிரத்து 653 ரூபாய் (ரூ. 188,38,49,653) கிடைக்குமென்றும் நிதி மந்திரி திரு. யு. பி. வன்னிநாயக்கா எதிர்பார்க்கின்றார்.

பார்லிமென்ட் இன்று பகல் 2 மணிக்கு கூடியபொழுது நிதிமந்திரி திரு யு. பி வன்னிநாயக்கா, 65-66ம் வருட உத்தேச வருமானம் செலவினங்கள் பற்றிய மதிப்பீட்டை சமர்ப்பித்தார்.

துண்டுவிழும் தொகை 61 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்ட பொழுதிலும் இதுவரை கிடைத்த வெளிநாட்டு உதவிகளுக்கிணங்க இத்துண்டு விழும் தொகையில், ஒன்பது கோடி ரூபா குறையும். இதுவரை வெளிநாட்டு நிதி உதவியாக ஒன்பது கோடியே 46 லட்சம் ரூபாய் கிடைத்திருக்கிறது. இதன்படி பட்ஜட்டில் துண்டுவிழும் தொகை 52 கோடியே 31 லட்சமாகக் குறைகிறது. ஆனால் வெளிநாட்டு உதவிகள் மேலும் கிடைக்க இருப்பதால் துண்டுவிழும் தொகை இன்னும் குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### சாராய விற்பனையில் அதிக லாபம்

எதிர்காலத்தில் சாராய விற்பனையில் அரசாங்கத்துக்கு அதிக லாபம் கிடைக்கவிருக்கிறது. கடந்த வருடங்களிலும் பார்க்க இரண்டு கோடி ரூபாய் அதிக லாபம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. கல்லோயாவிலும் கந்தளாயிலும் கரும்பாலும் சீனி உற்பத்தி அதிகரிப்பதனால் சாராய உற்பத்தி அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சீனியை விற்பனை செய்ததன் மூலம் அரசாங்கத்துக்கு இரண்டு கோடியே ஒரு லட்சம் ரூபா லாபமாக கிடைக்கும். கடந்த வருடத்தில் இறக்குமதி சீனியை விற்பனை செய்ததன் மூலம் அரசாங்கத்துக்கு ஒரு கோடியே 49 லட்சம் ரூபா கிடைத்தது.

### ஒப்பந்தத்துக்கு பத்துலட்சம் ரூபா

கடந்த வருடத்தில் இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரிக்கும் இலங்கையின் முன்னாள் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு மிடையே செய்துகொள்ளப்பட்ட இலங்கை இந்தியர் ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதற்கு புதிய பட்ஜட்டில் பத்து லட்சம் ரூபா ஒதுக்கப்படும்.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை அமுல் செய்வதற்கும் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. பிரஜைகளைப் பதிவு செய்த கொள்கை சம்பந்தமான செலவினங்களுக்காக பதினொருலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

### வருமான வரி சலுகைகள்

புதிய பட்ஜட்டில் வருமான வரி சலுகைகள் அதிகமாகக் கிடைக்கும் என கூறப்படுகிறது. கடந்த வருடத்திலும் பார்க்க ஒரு கோடி ரூபாய் பெறுமதிக்கு வருமான வரி சலுகைகள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### ஆகஸ்ட் 9-ல் பட்ஜட் யோசனைகள்

65-66-ம் ஆண்டு பட்ஜட்டில் துண்டு விழும் தொகையைச் சரிக்கட்டுவது சம்பந்தமான யோசனைகளை அடுத்த மாதம் ஒன்பதாம் திகதி நிதி மந்திரி திரு. யு பி. வன்னிநாயக்கா அறிவிப்பார்.

### கூடிய உதவி

இலங்கைக்கு கனடா, கம்யூனிஸ்ட் சீனா, சோவியத் யூனியன் ஆகிய நாடுகளிலிருந்து கூடுதலான நிதி உதவிகள் கிடைக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## அமைச்சுக்களின் உத்தேச செலவினம்

ஒவ்வொரு அமைச்சுக்கும் 1964—65-ம் வருடத்தில் ஒதுக்கப்பட்ட செலவினங்களும் 1965—66-ம் வருடத்தில் ஒதுக்கப்பட்டுள்ள உத்தேச செலவினங்களும் வருமாறு:—

| | 64—65 | 65—66 |
|---|---|---|
| கவர்னர் ஜெனரல், பிரதமர் மற்றும் பொது | 14,100,164 | 11 618 986 |
| பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு | 124,0[illegible]0 771 | 129 517 803 |
| திட்டம் வேலைவாய்ப்பு அமைச்சு | 430 837 | 1 133 765 |
| ராஜாங்க அமைச்சு | 32,388 775 | 238 [illegible] 168 |
| நிதி அமைச்சு | 351 104,68[illegible] | 409 949,868 |
| காணி, நீர்ப்பாசன அமைச்சு | 304 728 412 | 384,265 039 |
| உள்நாட்டமைச்சு | 56 848 062 | 59 77[illegible],480 |
| சுகாதார அமைச்சு | 159 854,271 | 162,457,464 |
| தேசியசேவை அமைச்சு | 87 568 891 | 86.135,181 |
| கைத்தொழில் மீன்பிடி அமைச்சு | 107 471 719 | 126 934,226 |
| வர்த்தக அமைச்சு | 13 870 665 | 16,017,299 |
| நீதி அமைச்சு | 26 114 338 | 25 775.898 |
| ஸ்தல ஸ்தாபன அமைச்சு | 65,176 268 | 56 7[illegible]8,832 |
| உணவு விவசாய அமைச்சு | 4[illegible]4 48[illegible],447 | 88[illegible] 428,082 |
| கல்வி அமைச்சு | 868 988 502 | 878 448,096 |
| தொழில் வீடமைப்பு அமைச்சு | 11 764 885 | 13 193 401 |
| மராமத்து அமைச்சு | 161,763 682 | 165 3[illegible]6 028 |
| போக்குவரத்து அமைச்சு | 17,842,744 | 173 607 737 |
| சமூகசேவை அமைச்சு | 84,076,132 | 88,451,021 |

### மணிவாக்கு

'பாமர மனிதனை விட சிறிது பண்புள்ள வார்த்தைகளைப் பேசத் தெரிவதால் நீங்கள் உங்களைப் பெரியவர்களாக்கிக்கொள்கிறீர்கள். பண்பில் பெரியவர்நாம் அறிவில் பெரியவர்நாம் என்ற எண்ணம் என்று உங்களிடம் புகுகின்றதோ அன்றே நீங்கள் அழிந்து விடுவீர்கள். எல்லாத் தளைகளையும் விடப் பயங்கரமானது அறிவுச் செருக்கேயாகும்.

—சுவாமி விவேகானந்தர்


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49. Jaffna. Grams: "EELANADU" Jaffna Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆடி 13 உ (28-7-65)


## திரைப்பட நூல்நிலையம்

இலங்கையில் திரைப்பட நூல்நிலையமொன்று அமைப்பது மாணவர்களுக்கும் பெரியோருக்கும் நன்மை பயப்பதாகும்.

யாழ்ப்பாணத்தில் சிலதினங்களுக்கு முன் வனவிலங்குப் பாதுகாப்பு வாரத்தையொட்டி திரைப்படங்கள் சில காண்பிக்கப்பட்டன. இலங்கையிலுள்ள வில்பத்து வனவிலங்குப் பாதுகாப்புவனம், ஆபிரிக்க வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் பறவைகளைப்பற்றிய ஒரு படம். இம்மூன்று திரைப்படங்களையும் பார்க்கும் வாய்ப்பு ஒருசிலருக்கே கிடைத்திருக்கும். வில்பத்து இலங்கையில்தானிருக்கிறது. இந்த வனத்துக்கு நேரில் சென்று வனவிலங்குகளைப் பார்த்து மகிழக்கூடிய வாய்ப்பும் வசதியும் எல்லோருக்கும் கிடைக்க முடியாது. கொழும்பிலுள்ள மிருகக் காட்சிசாலைக்குச் சென்று அங்குள்ள மிருகங்களையும் பறவைகளையும் மற்றும் உயிரினங்களையும் பார்த்து மகிழும் வாய்ப்புக் கிடைக்காதவர்கள் இந்நாட்டிலேயே பலர் இருக்கின்றனர். இந்நிலையில் ஆபிரிக்கக் கானகங்களில் சுதந்திரமாகத் திரியும் விலங்குகளின் வாழ்க்கையையோ அமெரிக்கப்பறவைகளின் காட்சிகளையோ நேரில் காண்பதென்பது கனவிலும் சுலபமல்ல. வனவிலங்குகள், பறவைகள் மட்டுமல்ல லண்டனிலும் மற்றும் வெளிநாடுகளிலுமுள்ள புராதன தேவாலயங்களையும் மெக்காவில் புனித கஃபாவையும், தென்னிந்தியாவில் தில்லைநடராஜர் ஆலயம், மதுரை மீனாட்சி கோவில் போன்ற சமயசம்பந்தமான புனித ஸ்தலங்களையும் நேரில் சென்று தரிசிக்கும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை, கிடைக்கவும் முடியாது. இன்று இலங்கையில் அமுலிலுள்ள பிரயாணக் கட்டுப்பாட்டு விதிகள் வேறு வசதியுள்ளவர்களுக்குத் தடையாக இருக்கிறது. சமய சம்பந்தமான ஸ்தலங்கள் மட்டுமல்ல மாணவர்களுக்கும் மற்றையோருக்கும் அறிவூட்டக்கூடிய சரித்திர சம்பந்தமான சின்னங்களும், ஸ்தலங்களும் புத்தகங்களிலும் பத்திரிகைகளிலும் படிப்பதுடன் அவற்றைநேரிலும் பார்க்கும் வாய்ப்புப் பலருக்கும் இல்லை.

எனவே சமய ஸ்தலங்களும், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பற்றியும் நாட்டுக்கு நாடு வேறுபட்ட வனவிலங்குகள், பறவைகள் பற்றியும் இன்று திரைப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன, இன்னும் தயாரிக்கப்பட்டுவருகின்றன. இப்படங்களை இங்கு எந்தப் பகுதியில் திரையிடப்படவேண்டுமானாலும் இங்குள்ள வெளிநாட்டுத் தூதரகங்களின் தயவையே நாடவேண்டியுள்ளது.

அறிவு வளர்ச்சிக்கும் ஆத்ம திருப்திக்குமான திரைப்படங்களைக்கொண்ட நூல்நிலையம் இந்நாட்டில் நிறுவப்படுவது நன்மையளிக்கும் மாநகரசபை. நகரசபை போன்ற ஸ்தல ஸ்தாபன சபைகளும், கல்வி இலாகாவும் இவ்வித திரைப்பட நூல்நிலையங்களை அமைக்க வேண்டும். கல்வி, கலாச்சார அமைச்சு இதற்கு ஊக்கமும் உதவியுமளிக்க வேண்டும்.

# கதிர்காமத்துறை வினைதீர்க்கும் வேல் முருகன்

[வேண்டுவோர் வேண்டுவன விருப்புடன் அளிக்கும் வேல் முருகன் வீற்றிருக்கும் பழமையும்பெருமையும் வாய்ந்த கதிர்காமக் கொடியேற்றம் இன்றாகும் இதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது].

'உருவாய் யருவா யுளதாய் யிலதாய்
மருவாய் மலராய் மணியாய் யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே'

தமிழக மக்களின் தனிப் பெருஞ் செல்வம் கந்தன். கந்தன் கருணையில் அளவற்ற நம்பிக்கை கொண்ட மக்கள் அகத்திலும் புறத்திலும் கந்தனைக் குடிபுகச் செய்துள்ளனர். திருப்பரங்குன்றத்திலும் திருச்சீர் அலைவாயிலும் பழனியிலும் பழமுதிர் சோலையிலும், குன்றுதோறாடலிலும் குமிண்சிரிப்புடன் வீற்றிருக்கும் குமரன் ஈழத்திருநாட்டில் இணையற்ற தலமாகிய கதிர்காமத்திலும் அருளே உருவாய் அன்பர்க்கு அருமணிச்சுடராய் விளங்குகின்றான்.

தமிழக அன்பர்கள் ஈழம் என்றதும் கதிர்காமத்தின் அழகையே கேட்கிறார்கள், புகழ்கிறார்கள். கதிர்காமத்தைப் பற்றிய பல அதிசயக் கதைகளைத் தென்னிந்திய மக்கள் கூறி உண்மைதானா என வினவுகிறார்கள், அவர்கள் கூறும் அதிசயக்கதைதான் அப்பனின் அளப்பருந் தன்மையை விளக்குவனவாக அமைந்திருக்கின்றன! ஈழமக்களை இணைத்து வைத்திருக்கும் சிதம்பரம், மதுரை, திருச்செந்தூர் ஆகிய திருக்கோவில்கள் போன்று தமிழக மக்களைக் கதிர்காமம் இணைத்துக் கொண்டிருக்கிறது. கந்தனின் திருநாமங்கள் பலவும் கருத்துக்கு விருந்தளிக்கும் செந்தமிழ் முருகன் என்ற பெயர் முழுமையானது; அழகு இளமை நறுமணம் மிக்கவன் கந்தன் என்று அப்பெயர் அழகாக விளக்குகிறது. முருகன் என்பதில் உள்ள முருகு தமிழை அழகுபடுத்தும் மூவினங்களையும் அமைந்திருத்தலும் தனிப் பெரும் சிறப்பாகும். தேவர்கள் துயர் போக்கத் தாமரைப் பொய்கையில் தோன்றிய கந்தனை கார்த்திகைப் பெண்கள் எடுத்து அன்புடன் அணைத்து மகிழ்கிறார்கள். அதனால் முருகு கார்த்திகேயன் என்ற திருநாமம் பெறுகிறார். ஆறுமுகங்களுடன் தோன்றி அன்பர்களது அல்லல்கள் போக்கிய தால் ஆறுமுகப் பெருமானெனப் பக்தர்கள் பரவசத்துடன் அழைக்கின்றனர்.

தொல்காப்பியம் முருகன் விருப்புறையும் இடத்தைச் சுட்டிக்காட்டுகிறது. திருமுருகாற்றுப்படை கந்தனிடம் நம்மை அழைத்துச் செல்கிறது. கந்தபுராணம் கந்தனின் அற்புதங்களைக் கதைகளுடன் பொருத்திக் கவினுறக் காட்டுகிறது. அருணகிரிநாதர் அன்பொழுகப் பாடிய திருப்புகழ் குறைகள் போக்கும் குமரனைக் குவலயத்தார் நெஞ்சில் நிறுத்துகிறது.

பல்வேறு நாமம் தாங்கிப் பக்தர்க்கு அருள் செய்யும் பரமன் திருமகன் கதிர்காமம் போன்ற குறிஞ்சி நிலத்தில் விரும்பி வீற்றிருக்கும் காரணத்தைக் காண்போம். குறிஞ்சி, முல்லை மருதம் நெய்தல் பாலை யென வகுத்த தமிழன் குறிஞ்சியையே முதலில் வைத்திருக்கிறான். முருகனை முதன்மைத் தெய்வமாகப் போற்றும் தமிழ் மக்கள் தாங்கள் வகுத்த முதல் நிலத்தில் அவரை வீற்றிருக்கச் செய்தனர். என்றும் அறிவில் சிறந்தோரை ஆற்றலில் மிக்கோரை உயர்ந்த இடத்தில் உட்காரவைத்து மதிப்பளிக்கும் தமிழ்மக்கள் வினைகள் தீர்க்கும் குமரனை குன்றிலே குடிகொள்ளச்செய்து உதவ லமைந்தனர் எனலாம்.

குறிஞ்சி நிலமாகிய கதிர்காமத்தில் வீற்றிருக்கும் முருகனின் அருளை தமிழ்மக்கள் எண்ணி எண்ணி உருகினார்கள். பழமைநாளையா காலத்தில் இன்றுபோல் போக்குவரத்து வசதிகள் இருக்கவில்லை. காடு மலைகள் நிறைந்த பயங்கர மிருகங்களைக்கொண்ட பாதைகளைத் தாண்டி அவர்கள் பக்தி பரவசத்துடன் கதிர்காமத்திற்குச் சென்று வந்தனர். இன்றும் பல்லாயிரக்கணக்கானோர் கதிர்காமத்தில் உறை கந்தனைக்கண்டு களிப்புருவகை எய்தக் கதிர்காமத்தை நாடுகின்றனர் கதிர்காமத்தில் வள்ளி அம்மன் ஆலயம், தெய்வானை அம்மன் ஆலயம், செல்லக் கதிர்காமம், முத்துலிங்கசுவாமி கோவில், கதிரைமலை, வீபூதி மலை ஆகியன தனித்தனி மகிமை உடையனவாய் விளங்குகின்றன. சிவனொளி பாதம் போல கதிர்காமமும் சர்வமத சமாசத்தை உண்டாக்கும் புனித தலமாக விளங்குகிறது அங்கு செல்லும் எம்மதத்தினரும் வீபூதி சந்தனம் பெற்று முருகனையும் தரிசித்தே வருகின்றனர். தன்னை நாடிவரும் அன்பர்களுக்கு கதிர்காமத்தில் வீற்றிருக்கும் கருணைக்கடல் வேலினால் அவர்களது வினைகளைத் தீர்க்கின்றான் குறைகளைப் போக்குகின்றான் நிறை இன்பத்தை அள்ளி அள்ளி வழங்குகின்றான் வேல்முருகன் விருப்புடன் வீற்றிருக்கும் கதிர்காமக்கொடியேற்ற விழா இன்று ஆரம்பமாகிறது பக்தி வலையிற்படும் பரமனை மனத்தை அன்புடன் தரிசித்து அனைவரும் அருள் பெறுவோம்.

'சிவசக்தி ஜயசக்தி முருகா! ஓம்சக்தி சிவசக்தி ஜயசக்தி முருகா! கதிர்காம மாமலைச் சூடி-முருகா கருணையை வேண்டிக் கருத்துருகின்றோம்'
(சிவ)

ஃ ஃ ஃ

கலையாக வளர்கின்ற முருகா-சக்திக் கனலாக நிலவிடும் கதிர்காம முருகா!-

சுத்தானந்த மகரிஷி

# பற்களை சுத்தமாக வைத்திருக்க வழி

— டாக்டர் கி. நித்தியானந்தன் —

[மானிப்பாய் பட்டினசபையின் ஆதரவில் சென்ற சனிக்கிழமை மானிப்பாய் மெமோரியல் பாடசாலையில் சுகாதார விழா கொண்டாடப்பட்டது. திரு. கி இராசேந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் பல் வைத்தியப்பொறுப் பதிகாரியாகக் கடமையாற்றும் டாக்டர் கி நித்தியானந்தன் நிகழ்த்திய உரையை இங்கு கட்டுரையாகப் பிரசுரித்துள்ளோம்]



வாய்ச் சௌக்கியத்திற்கும் பற்சௌக்கியத்திற்கும் ஏற்ற சில விதிகள்:-

சமநிலையுள்ளதும் சத்துள்ளதுமான உணவை உண்ணுதல்,

எல்லாப் பற்களும் பயன்படும்படி உணவை மென்று உட்கொள்ளல்,

உணவு உட்கொண்ட ஒவ்வொரு தடவைக்குப் பிறகும் பற்களைச் சுத்தம் செய்தல்,

அதிகமான இனிப்பு அல்லது புளிப்பு சேர்ந்த பண்டங்களையோ அல்லது பானங்களையோ தவிர்த்தல்.

மெதுமையான, ஒட்டக்கூடிய உணவுகளைத் தவிர்த்தல்,

அதிக சூடான அல்லது குளிரான பானங்களை அறவே விலக்குதல்,

பல்துலக்கும்போது பல்லின் எயிறுகளை விரல் நுனிகளால் அழுத்திப் பிடித்தல்,

பல் தூரிகையில் பற்களியை ஒட்டுப பற்களைத் துலக்குதல்,

புகையிலையையும் சுண்ணாம்பையும் தவிர்த்தல்,

வருடத்தில் ஒருமுறையோ அல்லது இருமுறையோ பல் வைத்தியரிடம் பரிசோதனைக்குச் செல்லல்.

பல் நோய்களுள், மிகவும் கெட்டது "பயரியா" என்று சொல்லப்படும் நோயே. இந்நோயின் தொடக்கத்தில் எயிற்றில் இருந்து இரத்தம் வரும் சில காலங்கள் சென்றதும் சீழ் வடிந்துகொண்டு நிற்கும், வாய் நாற்றம் கொடுக்கும். வாயில் எச்சில் அதிகமாக ஊறும். தகுந்த முறையில் சிகிச்சை செய்யாதுவிடில், பற்கள் ஆட்டம் கொடுக்கத் தொடங்கி, காலகதியில் நோயாளியையே ஈடாட்டம் போடச்செய்யும். இந்த வியாதியால் பலசமயங்களில், கண்நோய், தலைவலி, வயிற்றுக் குழப்பங்கள், வாதம், நரம்புத் தொடர்புள்ள வியாதிகள், இருதய நோய், தோல்வியாதி முதலிய நோய்களும் ஏற்படுகின்றன. நோயை முற்றவிடாது கவனம் எடுத்தால் தொடக்கத்திலேயே தடுத்துவிடலாம். அதிக நாளாக அறியாமையால் இருந்துவிட்டால், பற்கள் எல்லாவற்றையும் பல் வைத்தியரைக்கொண்டு பிடுங்குதலே தகுந்த சிகிச்சையாகும் மேற்கூறப்பட்ட சில நோய்களும் ஆச்சரியம் உண்டாகும் வண்ணம் மறைந்து போய்விடும். முரசுகள் இறுகிய பின்பு பற்தகடுகள் கட்டயம் போடுவித்தல் வேண்டும். இவை ஓரளவிற்கு அழகையும் பேசுவதற்கு உதவியாக இருப்

(6-பக்கம் பார்க்க)

## நாட்டிலும் நகரிலும்

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் படுக்க படுக்கையாக கிடக்கும் நோயாளிகளுக்குக்கொடுக்கப்படும் உணவில் முக்கியமானதொன்று வெண்ணை பால் வெண்ணையில் கொழுப்பை வளர்க்கும் சத்து நிறைய இருக்கிறது. அதனால் அது பொதுவாக எல்லா நோயாளிகளுக்கும் பிரதானமாக புஷ்டி குறைந்துபோய் நோயை எதிர்க்கும் சக்தியை இழந்த கசநோயாளிகளுக்கு மிகவும் இன்றியமையாதது; இதுவுமன்றி, நோயில்லாதவர்களே வெறும் பாணைத் தின்ன சற்று பின்வாங்குவார்கள். நோயுள்ளவர்கள் எப்படித் தனியே பாணைத் தின்பது?

கடந்த சில மாதங்களாக ஆஸ்பத்திரி நோயாளிகளுக்கு பாணுடன் வெண்ணை கொடுக்கும் வழக்கம் கைவிடப்பட்டிருக்கிறது. அவுஸ்திரேலியா முதலிய பிறநாடுகளிலிருந்து வெண்ணை தருவிப்பதற்குப் போதிய செலாவணி எம்மிடம் இல்லாததே இதற்குக் காரணமென்றும் கூறப்படுகிறது. பால் வெண்ணைக்குப் பதிலாக 'மார்ஜரின்' என்ற ஒரு வஸ்து பாணுடன் கொடுக்கப்பட்டது, நோயாளிகள் அதைத்தொட்டு நாக்கில் வைத்துவிட்டுத் துப்பி விட்டார்கள். சவர்க்காரம் செய்வதற்கு உபயோகிக்கப்படும் 'மார்ஜரீ'னை மனிதருக்கு உணவாக அளித்தது எவ்வளவு பெரிய பாவம்! நோயாளிகள் இப்பொழுது பாணை வெறுமனே தின்ன வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

என்னதானிருந்தாலும் ஆஸ்பத்திரியே தஞ்சம் என்று நம்பி வந்த நோயாளிகளுக்கு வெண்ணை கொடுக்காமல் விடுவது மிகவும் அக்கிரமம். அரசாங்க இலாகாக்களில் கோடி கோடியாக ரூபாய்களை வீண் விரயம் செய்கிறார்கள். நோயாளிகளுக்கு இரண்டு அவுன்ஸ் வெண்ணை கொடுப்பதற்கா பணம் இல்லாமற் போய்விட்டது!

நோயுள்ளவரோ நோயில்லாதவரோ பொதுவாக வெண்ணை, பால், மோர் முதலிய உணவுகள் எல்லோராலும் தினமும் உட்கொள்ளப் படவேண்டியவை. ஆனால் என்ன காரணத்தினாலோ இந்நாட்டிலுள்ளவர்கள் பாலுணவுகளை தக்க அக்கறையுடன் உண்பதில்லை. நோய் உண்டாகும் சமயத்தில் தான் அவற்றைத் தேடுவார்கள் அப்பொழுதும் சுத்தமானபாலுணவுகளை தேடுவதில்லை. கடைக்குப்போய் தகரத்தில் அடைத்த பிறநாட்டுப் பொருட்களையே விரும்புவார்கள்!

இது ஒருபுறமிருக்க, வெண்ணைக்கு நாம் ஏன் அவுஸ்திரேலியாவுக்குப் போகவேண்டும்? இந்நாட்டுக்குத் தேவையான வெண்ணையை இங்கேயே உற்பத்தி செய்துகொள்ள முடியாதா? சில வருடங்களுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய பால்சபை இந்த விஷயத்தில் ஏன் முயற்சி எடுக்கவில்லை? கிராமப் பக்கங்களில், முக்கியமாக வன்னிப் பகுதியில் மாடு, எருமை, ஆடு முதலிய கால்நடைகளை வளர்க்கும் கமக்காரர் தாங்கள் கறக்கும் பாலை விற்பனை செய்ய முடியாமல் திண்டாடுகிறார்கள். இந்தப் பாலை வாங்கி வெண்ணை போடுவதற்கு ஏன் முடியாது? தேசிய பால்சபை, பால் வியாபாரத்துடன் நின்றுவிடாமல் பாலுணவு உற்பத்தியிலும் கவனம் செலுத்த வேண்டும்.

ஃ ஃ ஃ

இன்று ஆடி அமாவாசை. மாவிட்டபுரத்தில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமான் கீரிமலைக்குச் சென்று தீர்த்தம் ஆடுவார், நகுல முனிவர் தவமிருந்த இப்புனித க்ஷேத்திரத்துக்கு யாழ்ப்பாணத்தின் எல்லாப் பகுதிகளிலுமிருந்தும் இன்று பலபேர் தீர்த்தமாடச் செல்வார்கள். சிலர் தங்கள்

(6-ம் பக்கம் பார்க்க)

## அதிக பழங்கள் ஆபத்து!

நியூயார்க், (ராட்) ஜூலை 27

"அதிகமான பழங்கள் சாப்பிடுங்கள், உடலுக்கு நல்லது" என்று மேற்குஜெர்மன் டாக்டர் ருடால்ப் மீனர்ட் கூறியிருக்கிறார்.

ஆனால் இது வயதுவந்தவர்களுக்கு மட்டும்தான், குழந்தைகள் அதிகமாகப் பழங்கள் சாப்பிட்டால் நல்லதல்ல. உடம்பு பெருக்கும்.

ஜெர்மானியர்களில் பாதிப்பேர் உடல் பருமன் உள்ளவர்கள், வயதானவர்கள் மட்டுமன்றி சிறுவர்களுக்கும் சிறிதளவு "தொந்தி" இருக்கிறது. இதற்குக் காரணம் குழந்தைகள் அதிகமான அளவு பழங்கள் சாப்பிடுவதும் நிறைய பழரசங்கள் குடிப்பதும்தான் என டாக்டர் மீனர்ட் கருதுகிறார். நிறையப் பழங்கள் சாப்பிட்டால் வயதுவந்தவர்களின் பெருத்த உடம்பு குறையும். ஆனால் குழந்தைகள் விஷயத்தில் இதற்குமாருக உடல் பெருக்கும். பள்ளி இடைநேரத்தின்போது குழந்தைகள் இனிப்புத் தின்பண்டங்களைச் சாப்பிட்டு உடம்பை மேலும் பெருக்க விடாமல் தடுக்க திராட்சைப்பழம், முந்திரிப்பருப்பு இவை பொதித்த புதுமாதிரி பிஸ்கட் ஒன்றை மேற்குஜெர்மனியில் ரொட்டிக் கடைக்காரர்கள் தயாரித்து வருகிறார்கள்.

## ஆபிரிக்க ஐக்கியத்துக்கான போராட்டம்

பெர்லின், ஜூலை 27

"ஆபிரிக்க ஐக்கியத்துக்காக நடைபெறும் போராட்டம் சோஷலிஸ நாடுகளுக்கும் உலகிற்கும் பெரிதும் பயனுள்ளது" என்று ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் தொழிற்சங்க சம்மேளனத்தின் 20-வது ஆண்டுவிழாவில் கலந்து கொள்வதற்காக இங்கு வந்திருந்த அகிலஆபிரிக்கத்தொழிற்சம்மேளனத்தின் பொதுக் காரியதரிசி திரு. ஜோன் டெட்டகா கூறினார். பெர்லினில் தொழிற்சங்கக் கல்லூரியில் பயிற்சி பெற்றுவரும் தமது தொழிற்சங்கப் பிரதிநிதிகளைப்பற்றிக் குறிப்பிட்ட அவர், அக்கல்லூரியில் ஏற்கனவே பயிற்சி பெற்றவர்கள் 36 ஆபிரிக்க நாடுகளில் பொறுப்பான பதவிகள் வகிப்பதாகவும் தெரிவித்தார்.

## ஆயுத உற்பத்தியை கைவிட யோசனை

பெர்லின், ஜூலை 27

"ஆயுத உற்பத்தியைநிறுத்த வேண்டுமென்பதில் ஓர் இணக்கம் ஏற்பட வேண்டுமென்றும் நேசஉறவு ஏற்படுத்தும் பொருட்டு இரு ஜெர்மன் அரசாங்கங்கள் இடையே பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டுமென்றும் நாங்கள் விரும்புகிறோம்" என்று ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு ஜனாதிபதி திரு. வோல்டர் உல்பிரிச் ஒரு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஜெர்மன் பிரச்னையைத் தீர்ப்பதற்கான தமது கொள்கையை அவர் மீண்டும் வலியுறுத்தினர்.

## அரபு செய்தி ஸ்தாபனம்

அம்மான, ஜூலை 27

மத்திய அரபு செய்திஸ்தாபனம் ஒன்றை நிறுவவேண்டுமென அரபிய நாடுகளின் பத்திரிகையாளர் மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. இந்த மகாநாட்டில் ஜோர்டான், சைபீரியா, மொராக்கோ உட்பட ஏழுநாடுகள் பங்குபற்றின. ஐக்கியஅரபுக் குடியரசும் ஈராக்கும் கலந்து கொள்ளவில்லை. இவ்விரு நாடுகளும் கலந்து கொள்ளாமைக்குக் காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

## முனிச் கண்காட்சியில் வானவெளி நிலையம்

முனிச் (ராட்) 27

முனிச் நகரில் தற்போது நடைபெற்றுவருகிற முதல் உலகபோக்குவரத்து கண்காட்சியில் இடம்பெற்றுள்ளவைகளில் வானவெளி ஆராய்ச்சி நிலைய மாதிரி அமைப்பும் ஒன்றாகும். 70 அடி குறுக்கு விட்டம் கொண்ட இந்த மாதிரி வானவெளி ஆராய்ச்சிநிலையம், கண்காட்சியிலிருந்து 90 அடி உயரத்தில் தொங்கவிடப்படும் வானவெளி, விமானப்போக்குவரத்து பிரிவின் சின்னமாக இது விளங்கும். 88 நாடுகள் தனித்தனியாக இக்கண்காட்சியில் அரங்குகள் அமைத்துள்ளன. 100 க்கும் அதிகமான நாடுகள் கூட்டுசேர்ந்து அரங்குகள் அமைத்துள்ளன. இக்கண்காட்சி அக்டோபர் 8-ந் தேதிவரை நடக்கும்.

## பாப்பாண்டவர் நன்கொடை

புதுடில்லி, ஜூலை 27

குஜராத்தில் உள்ள ஏழைமக்களுக்கு உதவுவதற்கென குஜராத் கவர்னர் திரு. நித்யானந்த கனுங்கோவிற்கு 10,000 டாலர்களை அனுப்பிவைத்துள்ளார்.

## அதிகரிக்கும் குற்றங்கள்

வாஷிங்டன், ஜூலை 27

வருடத்திற்கு வருடம் அமெரிக்காவில் குற்றங்கள் அதிகரித்துவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. விசாரணைக் கமிஷன் டைரக்டர் திரு. எட்கர் ஹூவர் வெளியிட்டுள்ள தனது வருடாந்த அறிக்கையில் சென்ற வருடத்தில் 2,600,000 குற்றங்கள் நடைபெற்றுள்ளதாக அறிவித்துள்ளார். 1963ம் வருடத்தைவிட 13 சதவிகிதம் அதிகரித்துள்ளதாகவும் அந்த அறிக்கை குறிப்பிடுகின்றது. இளைஞர்கள் அதிக குற்றங்களில் ஈடுபட்டுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள் எனவும் அறிக்கை தெரிவிக்கிறது.

## ஐ. நா.வின் அமெரிக்க பிரதிநிதி

வாஷிங்டன், ஜூலை 27

அமெரிக்காவின் ஐ. நா. நிரந்தரப் பிரதிநிதியாக திரு. ஆதர் கோல்ட்பேர்க் நேற்று பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டார் ஐ நா வில் அமெரிக்காவின் நிரந்தரப் பிரதிநிதியாகக் கடமையாற்றிய திரு அட்லே ஸ்டீவின்சனுக்குப் பதிலாகவே இவர் நியமிக்கப்பட்டுள்ளார். திரு. ஸ்டீவின்சன் அண்மையில் காலமானர்.

## 40-க்கு மேல் பெண்கள் வேலைத்திறன் அதிகரிப்பு

மேற்கு பெர்லின் (டாட்) ஜூலை 27

40 வயதைத்தாண்டிய பெண்கள் திரும்பவும் வேலைசெய்ய வேண்டும், என பெயர்பெற்ற மேற்கு ஜெர்மன் டாக்டர் கிர்ச்ஷாப் கூறியிருக்கிறார்.

பொதுவாக பெண்கள் தங்கள் 40 வயதுக்கும் 60 வயதுக்கும் இடையேதான் அதிக வேலைத்திறனுடன் இருக்கிறார்கள். அதிகப்பொறுப்பு உணர்வுடன் விளங்குகிறார்கள், என்று ஆராய்ச்சியிலிருந்து கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகி தனியே போனபின் பெண்களுக்கு போதுமான வேலை இருப்பதில்லை. இவ்வித பெண்களுக்கு பணம்தேடுதல்ல உடலையும் உளத்தையும் சுறுசுறுப்பாக வைத்துக்கொள்ள சாதாரண வழக்கமான வேலை கொடுத்தால் போதும் என்று டாக்டர் கிர்ச்ஷாப் கூறுகிறார் ஆனால் அதே சமயத்தில் குழந்தைகள் பெற்று வளர்த்துவருகிற இளம் பெண்களுக்கு குறைவான வேலையும், அதிக ஓய்வும் தேவை என்கிறார் ஏனெனில் ஆபீஸ் வேலையையும், வீட்டு வேலையையும் செய்து இவர்கள் களைப்படைகிறார்கள். அதுவும் திருமணமான புதிதில் பெண்கள் மிகவும் கடுமையாக வேலைசெய்து உடம்பை "பாழாக்கிக்கொள்கிறார்கள்." பெண்கள் பிற்காலத்திலும் பயனுறும் வகையில் ஆரம்பத்திலிருந்தே தங்கள் சக்தியை சீராகப் பயன்படுத்திவரவேண்டும் என்று இவர் ஆலோசனை கூறினர்.

## மேலதிக நன்கொடை

பம்பலப்பிட்டி, செல்வாய்

'பிரிவினு' பாடசாலைகள் கல்வி மந்திரிக்குச் சமர்ப்பித்த கோரிக்கையின் காரணமாக மேலதிக மான்யங்களைப் பெறவிருக்கின்றன.

கல்விப்பகுதியாளரின் தகவலின்படி பிரிவினு பாடசாலைகளுக்கு 8,000,000 ரூபாவரையில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

"விபுலானந்த அடிகளார் ஞாபகமாக

## தபால் தலைகளை வெளியிட தேசிய அரசாங்கம் முன்வரவேண்டும்"

### நினைவு விழாவில் பேச்சு

மட்டக்களப்பு, புதன்

"தேசியப்பெரியாரான அனகாரிக தருமபாலாவுக்கு தேசிய மரியாதை அளிக்கும் வகையில் இலங்கை அரசாங்கம் தபால் தலை வெளியிட்டுக் கௌரவித்ததுபோல தேசியப் பெரியோரான விபுலானந்த அடிகளாரதும் உருவம்பொறித்த தபால் தலைகளை வெளியிட்டுக் கௌரவிக்க இன்றிருக்கும் தேசிய அரசாங்கம் முன்வரவேண்டும்"

ஆரையம்பதி தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்ற விபுலானந்த அடிகளாரது நினைவுவிழாவில் ஆசிரியர் திரு. க. அமரசிங்கம் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். திரு. நடராசானந்தா விழாவுக்குத் தலைமை வகித்தார்

"இலங்கையில் பல்கலைக் கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராகவும், ஆரிய திரவிட பாஷா பிவிருத்திச் சங்கத்தை தோற்றுவிக்கக் காரணமாக இருந்தவரும் பொதுவாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் கல்வி நிலையங்கள் தோற்றுவதற்கு உழைத்தவருமான அடிகளார் தேசிய அடிப்படையில் கௌரவிக்கப்பட வேண்டியவர்" என்றும் திரு. அமரசிங்கம் தமது பேச்சின்போது தெரிவித்தார்.

மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலை பேராசிரியை பண்டிதை திருமதி கங்கேஸ்வரி கந்தையா பேசுகையில் கூறியதாவது:—

"விபுலானந்த அடிகளார் அன்று தாம் படிப்பதற்கு ஒரு சைவப் பாடசாலை யில்லாமல் தவித்தார்கள்; ஆனால் இன்று பல்லாயிரக் கணக்கான குழந்தைகள் பயில்வதற்கு பல சைவப்பாடசாலைகளைத் தோற்றுவித்துள்ளார். ஒரு தலைமுறையினர் செய்யவேண்டிய பெரும்முயற்சியை அடிகளார் தனிஒருவராக நின்று செய்து முடித்தது இதுஒன்றே அவரின் அரிய பெரிய சேவையாகும்".

பண்டிதர் செ பூபாலபிள்ளை பேசுகையில் இக்கிராமத்தில் அடிகளாரின்சேவையின் அடையாளமாக இத்தமிழ்க் கலவன் பாடசாலை விளங்கிக்கொண்டிருக்கிறதென்றும், அடிகளார் செய்த பல்வேறு தொண்டுகள் குறித்தும் கூறினர்.

பாடசாலை தலைமையாசிரியர் திரு கந்தையா வரவேற்புரை நிகழ்த்தினர். மாணவ மாணவிகளின் கதம்ப நிகழ்ச்சிகளும் விழாவின் இறுதி நிகழ்ச்சியாக இடம்பெற்றன.

## சமபிரதிநிதித்துவம்

பெர்லின், ஜூலை 27

இரு ஜெர்மன் ராஜ்யங்களின் பார்வையாளர்களை ஐக்கிய நாடு சபையில் அனுமதிக்காமலிருப்பதற்குக் காரணமில்லை என்று ஐ நா வின் 19-வது பொதுச்சபைத் தலைவரும்கானு வெளி விவகார மந்திரியுமான திரு. அலெக் க்வைஸன்-சாக்கு நியூயார்க்கில் கருத்துத் தெரிவித்துள்ளார். அவரதுகூற்றை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் பிரதிநிதியொருவர் இங்கு வரவேற்றார்.

இதுபற்றிய ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் கொள்கையை விளக்கிய அக்கப் பிரதிநிதி இரு ஜெர்மனி ராஜ்யங்களும் உலக ஸ்தாபனத்தில் உறுப்பினர்களாகவேண்டும் என்று குறிப்பிட்டார். தற்போது இது சாத்தியமில்லாவிடில் இரு ஜெர்மனிக்கும் ஐ நா வில் சமபல பிரதிநிதித்துவம் வழங்கவேண்டுமெனவும் அவர் வற்புறுத்தினர்.

## சர்வேயை நிறுத்துக

கராச்சி, ஜூலை 27

பாகிஸ்தான் பொது மக்களிடையே அமெரிக்க தகவல் ஸ்தாபனம் நடத்தும் சர்வேயை நிறுத்துமாறு பாக். அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. பாகிஸ்தானின் மிகவும் நட்பு நாடு எது, பகைநாடு எது என இந்த சர்வேயில் கேட்கப்பட்டிருக்கிறதாம்.

## சாஸ்திரி புதுடில்லி திரும்பினர்

புதுடில்லி, ஜூலை 27


பங்களூரில் நடைபெற்ற இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் கலந்துகொண்ட இந்தியப பிரதமர் திரு. சாஸ்திரி இன்று பகல் புதுடில்லி திரும்பினர்.

இங்கு அவர் நிருபர்களிடம் கோவா தகராறு குறித்து தெரிவிக்கையில் சம்பந்தப்பட்ட சகலரும் ஏற்கக்கூடிய விதத்தில் கோவா தகராறு தீர்த்துவைக்கப்படும் என்று கூறினர்.

## மேற்கு ஜெர்மனியில் பெரிய அணுமின்நிலையம்

ஸ்டட்கார்ட் (டாட்) ஜூலை 26

மேற்கு ஜெர்மனியிலேயே மிகப்பெரிய அணுசக்தி மின்சார நிலையம் ஒன்று ஒப்ரிக்கெம் என்னுமிடத்தில் சுமார் 900 இலட்சம் டாலர் செலவில் கட்டப்பட்டு வருகிறது சீமென்ஸ் மின்சாரக் கம்பெனியார் இதற்கு வடிவமைத்து கட்டி வருகிறார்கள். 44 மாத வேலைக்குப் பின்னர், 1968-ம் ஆண்டில் இந்த அணுசக்தி மின்நிலையம் கட்டிமுடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையம் 2880 இலட்சம் வாட் மின்சாரம் உற்பத்திசெய்யும்.



சக்தி வாய்ந்த யு. எஸ். ராக்கெட்டுகளை பூமியிலிருந்து அனுப்பும், உந்துநிலையத்தை இங்கே காணலாம்.



கல்வி, கலாசாரமந்திரி திரு. ஐ. எம். ஆர் ஏ. இரியகொலயும், அவரது பாரியாரும், சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்திற்கு விஜயம் செய்த போது வித்தியாலய அதிபர் திருமதி ஆர் வைத்திலிங்கம் அவர்களை வரவேற்று அழைத்துச் செல்வதை இப்படத்தில் காணலாம்.

படம்: 'ரவி', கொழும்பு ஸ்ருடியோ

# புவியியல் கருத்தரங்கு

## பல கல்லூரிகளின் விரிவுரையாளர்கள் பங்கு பற்றுகின்றனர்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தின் பல்வேறு கல்லூரிகளின் விரிவுரையாளர்கள் பங்கு பற்றும் புவியியற் கருத்தரங்கம் ஒன்று கொக்குவில் இந்து மத்திய மகாவித்தியாலயத்தில் காலை மாலை நடைபெறவிருக்கிறது. பல்வேறு பொருள் குறித்து இக்கருத்தரங்கில் விவாதிக்கப்படும்.

'இலங்கையின் குடிசனத் தொகையும் லைத்தொழில்கள் பற்றிய பிரச்சினைகளும்' என்னும் பொருள்பற்றி திரு. பி புவனராசனும், இந்தியக்குடிசனத்தொகையும் விவசாயம் பற்றிய பிரச்னைகளும்' என்னும் பொருள்பற்றி திரு. ஆர். எஸ் தம்பையாவும், 'மூவகை நில அமைப்புக்கள்' என்னும் பொருள்பற்றி திரு. சி. மனோகரனும், 'படங்களின் மூலம் வடகிழக்கு ஐக்கியநாடுகளின் வரலாற்றுப் புவியியல்' என்னும் பொருள்பற்றி, திரு. சி. எஸ். கி. நிச்செல்லையாவும், 'படஎறியங்களின் இயல்' என்னும் பொருள்பற்றி கலாநிதி டபிள்யு எல். ஜெயசிங்கமும் இக்கருத்தரங்கில் உரை நிகழ்த்துவர்.

புவியியல் பற்றிய சிறந்த நூல்கள், தேசப்படப் புத்தகங்கள், புவியியல் படங்கள் ஆகியவை கருத்தரங்கின்போது காட்சிக்கு வைக்கப்படும். யாழ்ப்பாணத்திலுள்ள சகல கல்லூரிகளிலும் புவியியல் கற்கும் மாணவர்களையும் இக்கருத்தரங்கில் பங்குபற்றும்படி புவியியல் மன்ற ஆலோசகரான திரு. டபிள்யு ஆர். அருளையா அழைத்துள்ளார். இக்கருத்தரங்கு புவியியல் கற்கும் மாணவர்களுக்கு பெரிதும் உதவியளிக்கக் கூடியதாக விருக்குமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

— —

## வித்தியாதரிசிக்கு பாராட்டு

வவனியா, செவ்வாய்

"கிளிநொச்சித் தொகுதிப் பாடசாலைகளின் தரம் குறைவாக இருந்தசமயம் வித்தியாதரிசியாக இங்கு மாறி வந்த திரு. க. கனகசபாபதியின் விடா முயற்சியால் பல புதிய பாடசாலைகள் உயர்நிலையடைந்ததுடன் கல்வித் தராதரமும் ஓரளவு உயர்ந்தது" என்று கிளிநொச்சி வட்டார வித்தியாதரிசி சாவகச்சேரிக்கு இடமாற்றம் செய்யப்பட்ட திரு. க. கனகசபாபதிக்கு கிளிநொச்சி வட்டார ஆசிரியர்களால் அளிக்கப்பட்ட பிரிவுபசார விருந்தில் கிளிநொச்சி நாகேசுவர வித்தியாலய அதிபர் திரு ஆர் சி சுப்பிரமணியம் பேசுகையில் குறிப்பிட்டார்.

உதவி வித்தியாபதி திரு. எஸ். தணிகாசலம் இவ்விழாவுக்குத் தலைமை வகித்தார்.

பின்னர் வித்தியாதரிசி தமக்களித்த உபசாரத்துக்கு நன்றி கூறினர்.

## 'சைவ மகாசபைகள் நிவர்த்திக்கவேண்டும்'

மீசாலை, புதன்

"சமய வாழ்வின் அவசியத்தைச் சைவசமயத் தலைவர்கள் வற்புறுத்துவதுமில்லை. ஆகவே இக்குறைபாட்டை சைவமகாசபைகள் நிவர்த்திக்கவேண்டும். சைவமகாசபையின் கிளைகள் இல்லாத கிராமங்களில் அவை நிறுவப்படவேண்டும்" என்று தென்மராட்சி சைவமகாசபைச் செயலாளர் திரு ஆர் சி சுப்பிரமணியம் சங்கத்தானை மீனாக்ஷி அம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெற்ற சைவமகாசபைக் கூட்டத்தில் கூறினர்.

தென்மராட்சி சைவமகாசபைத் தலைவர் சங்கீதபூஷணம் திரு சி விருசித்தம்பி தமது தலைமையுரையில் புராணங்கள் நல்ல உண்மைகளை விளக்குகின்றனவென்றும் எமது சமய நூல்களை இளைஞர்களுக்கு நன்கு புகட்டவேண்டுமென்றும் கூறினர். திரு மு பஞ்சாபிகேசன் திரு க முருகப்பா உட்பட வேறு பலரும் பேசினர்.

— —

## "ஆசிரியர்கள் கடமையைச் செவ்வனே செய்ய வேண்டும்"

### விளையாட்டு போட்டியில் வித்தியாதிபதி பேச்சு

யாழ்ப்பாணம், புதன்

"நல்ல சமுதாயத்தைச்சிருட்டிக்கும் நற்பணியில் ஈடுபடும் ஆசிரியர்கள் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக நற்குணம், நல்லொழுக்கம், நற்செயலில், மேம்பட்டவர்களாக இருக்க வேண்டும். ஆசிரியர்கள் முறைகேடாக நடப்பின் அவர் தம் மாணவரும் முறையற்றவரே இருப்பர்."

இவ்வாறு கொழும்புத்துறை ஆசிரிய கல்லூரியின் வருடாந்த இல்லப்போட்டி வைபவத்துக்குப் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட ஆசிரிய கல்லூரிகளின் வித்தியாதிகாரி திரு. டபிள்யு. ஏ. ஜே டபிள்யு. ஜெயதிலகா பேசுகையில் குறிப்பிட்டார்.

"தியாகவுள்ளமும் நேர்மையான கருத்தையும உள்ள ஆசிரியர்கள் தமது கடமையைச் செவ்வனே செய்ய வேண்டும் அவர்கள் அநாவசியமாக லீவுகள் எடுத்து மாணவருக்குச் செய்யும் தொண்டில் இருந்து தவறக்கூடாது" என்றும் அவர் தமது பேச்சின்போது தெரிவித்தார்.

விளையாட்டுப் போட்டிக்குத் தலைமை வகித்த மேற்படி கல்லூரி அதிபர் திரு. வி. எஸ். ஊஸ்லிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினர்.

நடைபெற்ற இல்லப்போட்டியில் பச்சை, நீலம், மஞ்சள் ஆகிய மூன்று இல்லங்களும் முறையே 102, 60, 57 புள்ளிகள் பெற்றன: பச்சை இல்லம் இவ்வருட சாம்பியனாகியது. அதே இல்லத்தைச் சேர்ந்த ஆசிரிய மாணவர் திரு. மு. இராசரத்தினம் விளையாட்டு வீரனாக வெற்றிபெற்ருர். வெற்றியீட்டிய வீரர்களுக்கு திருமதி ஜெயதிலகா பரிசில்களை வழங்கினர்.

—

## சைகோன்மீது தாக்குதல்

சைகோன், ஜூலை 27

தென்வியட்நாம் தலைநகரான சைகோனை வியட்காங் கொரில்லாக்கள் தீவிரமாக தாக்குவதில் இன்று ஈடுபட்டதாக அறிவிக்கப்படுகிறது.

## பலாலி கலாசாலை வெற்றியீட்டியது

யாழ்ப்பாணம், செவ்.

மகாரகமை, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளுக்கிடையில் சனிக்கிழமை பலாலி பயிற்சிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் பலாலி அரசினர் பயிற்சிக் கல்லூரி 3 கோல்களால் வெற்றியீட்டியது. விளையாட்டுத் தொடங்கி 8 நிமிடத்தில் குலசிங்கம் அடித்த பந்தை அல்பன்சோவை மேலி மிகவும் சாதுரியமாக தலையால் முட்டி வலைக்குள் பந்தை அனுப்பினர் பின் அருமைநாயகம் ஒருகோல் போட்டு இடைவேளையின் போது பலாலி 2-0 கோல்களால் முன்னணியில் நின்றது.

இடைவேளையின்பின் பலாலி மேலும் ஒரு கோல் போட்டது. மகாதேவா மு சின் ஆகியோர் நன்ருக விளையாடினர்கள். திரு எஸ சோமசுந்தரம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்

— —

## வரட்சிக்குப்பின் மழை

அம்பாறை, செவ்.

அம்பாறைப் பகுதியில் நிலவி வந்த வறட்சி செவ்வாய்க்கிழமை பெய்த மழையுடன் முடிவடைந்தது. அரை மணி நேரமாகத் தொடர்ந்து பெய்த மழை பலத்த காற்றுடன் சேர்ந்துகொண்டதால் இங்கே சேர்க்கஸ் கூடாரமொன்றையும் பெயர்த்தெடுத்துவிட்டது

## அனுதாபமும் பாராட்டும்

யாழ்ப்பாணம், செவ்.

சங்கானை பட்டினசபையின் மாதாந்தக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

சிறுபான்மைத் தமிழர் ஒருவர் முன்னுள் செயலாளராகவிருந்து சிறுபான்மைத் தமிழரின் முன்னேற்றத்திற்காக அயராதுழைத்த ஆசிரியர் திரு க பசுபதியின் மறைவையொட்டி இச்சபை அன்னுரின் குடும்பத்திற்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளுகிறது.

வலி-மேற்கு விவசாய விஸ்தரிப்பு அதிகாரியாக கடந்த ஐந்து வருடகாலம் நற்சேவை புரிந்து சங்கானை பட்டினசபை விவசாய முன்னேற்றத்திற்கு உழைத்தமைக்காக திரு. எம் நடராசாவிற்கு இச்சபை பாராட்டுத் தெரிவித்துக்கொள்கின்றது.

கூட்டத்திற்கு பட்டினசபைத் தலைவர் திரு. க அம்பலவாணர் தலைமைவகித்தார்.


**REGAL - JAFFNA**
**NOW SHOWING**
CORNEL WILDE
in
CONSTANTINE AND THE CROSS
(Cinemascope — Color)




## வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத திருப்பணி நிதி

ஒவ்வோர் சைவ நன்மக்களாலும் வளர்ந்து புதியரதங்களை விரைவில் உருவாக்க அடியார்கள் நன்கொடை எதிர்பார்க்கப்படுகிறது.

பணம் அனுப்பும் விலாசம்:-

தனதிகாரி, திருப்பணிச்சபை,
தேவஸ்தான காரியாலயம்,
வண்ணை. வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.


**கடைசி 3 தினங்கள்**

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **மொடேர்ன்** (பதுளை)
**வெம்பிலி** (கண்டி) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) **விஜிதா** (ஹட்டன்)

என். டி, ராமராவ், அஞ்சலிதேவி, ஜெமினி கணேசன். எம். ஆர். ராதா, மாஸ்டர் முரளி, பேபி உமா, நாகையா மற்றும் பலர் நடித்த




# லவகுசா

(முழுநீள கலர்ப்படம்)

உலகம் போற்றிப் புகழும் இராமாயண காவியத்தின் தித்திக்கும் ஒரு பொன்னேடு—லவகுசா—
படித்தவர்கள் பலகோடி! கேட்டவர்கள் பலகோடி!
இதோ சினிமாஸ்திரைகளில் பார்த்து மகிழுங்கள்!



மூட்டைப்பூச்சிகளை அழிப்பதற்கு
புதிய ஜெர்மன் மருந்து

# பெயரெக்ஸ்
BAYTEX

*Agents :*

PHONE : 397 ROYAL DISPENSARY JAFFNA

# விளம்பரம்

வலித்தூண்டல்

## அர்ச். அன்னம்மாள் திருநாள்

இவ்வருடம் ஆடி 31ந் திகதி திருமணித் தியாலமும், 1ந் திகதி ஞாயிறு காலை பூசையும், சுற்றுப்பிரகாரமும் நடைபெறும். 485

## ஆலய உற்சவம்

புத்தளம், செவ்வாய்

புத்தளம் சேனைக்குடியிருப்பு ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் ஆகஸ்ட் 2ந் திகதி முதல் 11ந் திகதிவரை நடைபெறும்.

தினசரி இரவு 8 மணி முதல் பூசையும் கதாப்பிரசங்கங்களும் நடைபெறும். 11ந் திகதி அலங்கார உற்சவமும் நகர் வீதிவலம் வருதலும் நடைபெறும். ——

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

**புதன் 28-7-65**

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ சுற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப் பாடல்கள், 7-30 தேர்ந்த இசை, 8-15 இஸ்லாமியகீதம், 10-00 மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் கோவில் தீர்த்தத் திருவிழா அஞ்சல்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 சதம்ப இசை-

மாலை 5-00 பிறந்தகின வாழ்த்துக்கள், 5-15 கிராமிய ஒலிப்பதிவுகள், 5-55 வயப் பாட்டு.

இரவு 6-15 கிராம சஞ்சிகை, 6-45 வீணை, 7-15 கவிதை மஞ்சரி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 6-15 வாத்திய இசை, 9-30 நேயர் விருப்பம், 10-00 தேர்ந்த இசை

——

## ஷாபி இல்லம் சாம்பியன்

யாழ்ப்பாணம், செவ்வாய்

"கல்லூரி விளையாட்டுப் போட்டிகள் மாணவரது நற்பண்புகளையும், ஆற்றல்களையும் வெளிப்படுத்தக்கூடிய ஒரு சாதனமாகவே அமைகின்றது வெற்றிக்காக மட்டுமல்ல, விளையாட்டின் மூலம் அடையும் பொறுமை, சகிப்பு, விடாமுயற்சி போன்ற நற்பண்புகளைப் பெற்றுக்கொள்ளவே விளையாட்டுப் போட்டிகளில் மாணவர் பங்குகொள்ளவேண்டும். உயர்ந்த படிப்பினைகளையும் இப்போட்டிகள் எமக்கு ஏற்படுத்துகின்றன."

இவ்வாறு ஜின்னா மைதானத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறை மாவட்ட நீதிபதி எம். எம். அப்துல்காதர் கூறினர்.

ஷாபி, அலி, இக்பால் ஆகிய இல்லங்கள் கலந்துகொண்ட இப்போட்டியில் 123 புள்ளிகளைப் பெற்ற ஷாபி இல்லம் இவ்வருடமும் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது. தொடர்ந்து மூன்று வருடங்களாக ஷாபி இல்லம் வெற்றியீட்டியது குறிப்பிடத்தக்கது 108புள்ளிகளைப் பெற்ற இக்பால் இல்லம் இரண்டாவதாகவும், அலி இல்லம் 91 புள்ளிகளைப் பெற்று மூன்றும் இடத்தையும் பெற்றன.

சம்பியன்கள் விபரம் வருமாறு: கனிஷ்ட பிரிவு: என். எம். அஜ்மல்கான் (அலி இல்லம்), மத்திய பிரிவு: ஏ. எம். பசீல் (அலி இல்லம்), சிரேஷ்ட பிரிவு: எம் எஸ். சுஹர்தீன் (இக்பால் இல்லம்)

வெற்றி பெற்றோருக்குரிய பரிசில்களை ஹாஜி வி. எம். எம் அப்துல்காதர் வழங்கினர்

பலாலி – மஹரகம

# ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விளையாட்டுப் போட்டி முடிவுகள்

குரும்பசிட்டி, செவ்

"போட்டிகளில் வெற்றி தோல்வியை முக்கியமாகஎடுத்துக்கொள்ளாது நமக்கிடையே சிநேகம் வளர ஏற்பாடு செய்துள்ளோம். மக்களுக்கிடையே சகிப்புத் தன்மை ஒற்றுமை, உறுதியான மனவளர்ச்சி ஆகியன உண்டாக வாழ்க்கையில் விளையாட்டுக்கள் பெரிதும் உதவுகின்றது" என கொழும்பு மஹரகம அரசினர் ஆசிரிய கலாசாலை அதிபர் திரு. டி. ஜி சுகததாஸ பலாலியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்கும், கொழும்பு மஹரகம ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்கும் அன்றைய தினம் 5-வது வருடாந்த நேரடி விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. பலாலி ஆசிரியகலாசாலை அதிபர் திரு. சி, சுந்தசாமி பரிசளிப்பு விழாவிற்கு தலைமை வகித்தார். திருமதிசுகததாஸா பரிசில்கள் வழங்கினர்.

இரு கல்லூரிகளுக் கிடையிலும் நேரடியாக நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியின் முடிவுகள் விபரம் வருமாறு.–

**ஆண்கள்**

100 யார்- கே பவா, ஏ புஞ்ஞாட்டன், ஆர் டி. சில்வா.

220 யார்- கே பவா, ஏ புஞ்ஞாட்டன், கே சாம்பமூர்த்தி.

440 யார்- கே பவா, ஏ புஞ்ஞாட்டன் பி குணபாலா.

880 யார்- டி திலகரத்தின, கே சேனரத்தின. ஆர் ஜெயமன்.

1 மைல்- டி திலகரத்தின, கே சேனரத்தின. டி குயின்ரன்.

பரிதி வட்டம் வீசுதல்- பி குணபால, கே சுந்தரலிங்கம், எஸ் திஸ்ஸநாயக்கா.

ஈட்டி எறிதல்- பி குணபால, எச் டி சில்வா, ஏ முகிலின்.

குண்டு எறிதல்- எஸ் மயில்வாகனம், கே சுந்தரலிங்கம், டபிள்யு அமரசேன.

உயரப் பாய்தல்- சி பின்டோ, பி சந்திரசோமா, பி நிசங்கா.

நீளப் பாய்தல்- ஏ குயின்ரன். ஏ துரைராசா, டி குணசேகரா.

கெந்தி அடி வைத்துப் பாய்தல்- டி குணசேகரா எம். சலீம், சி கமால்டீன்.

4X100 யார் அஞ்சல் ஓட்டம்-மஹரகம, பலாலி, பலாலி

4X440 யார் அஞ்சல் ஓட்டம்- பலாலி, மஹரகம, பலாலி.

கயிறு இழுத்தல்- பலாலி, மஹரகம.

**பெண்கள்**

100 யார்- நந்தா ஹெட்டியாராட்சி, சமனு இல்லவிட்டிகல, எல்சி கருணசேகரா

220 யார்- சமனு இல்விட்டிகல, எல்சி கருணசேகரா, கே கிருஷ்ணபிள்ளை.

பரிதி வட்டம் வீசுதல்- சமனு இல்விட்டிகல, நந்தா ஹெட்டியாராட்சி, சி பிரேமா.

பந்து வீசுதல்- சித்தா எக்கநாயக்கா, எஸ், இரத்தினம், பி. மபலகம,

நீளப் பாய்தல்- காமினி அன்ரன், இந்திரா ஜெயசிங்கி, சுமிமா டி சில்வா,

குண்டெறிதல்- சி பிரேமா, பி பிரகாஸ்பதி, சித்தா எக்கநாயக்கா.

கிறு அடித்தல்- நந்தா ஹெட்டியாராச்சி, பி பிரகாஸ்பதி, சுசிமா டி சில்வா.

தடை பாய்தல்- பலாலி, மஹரகம, மஹரகம

4X110 யார் அஞ்சல் ஓட்டம்- மஹரகம, மஹரகம, பலாலி. ——

## சப்பந்தர் இல்லம் வெற்றி

யாழ்ப்பாணம், செவ்வாய்

சாவகச்சேரி கெருடாவில் சரஸ்வதி த. க. வித்தியாசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி சென்ற வெள்ளிக்கிழமை பாடசாலை மைதானத்தில் தென்மராட்சிக் காரியாதிகாரி திரு. இ. சிதம்பரப்பிள்ளை தலைமையில் ஆரம்பமானது. பிரதம விருந்தினராகச் சாவகச்சேரி எம். பி. திரு வ. ந. நவரத்தினம் கலந்துகொண்டார். விளையாட்டு முடிவில் வெற்றியீட்டிய வீரர்களுக்குப் பரிசில்களை திரு. வ. ந. நவரத்தினம் எம். பி வழங்கினர், சம்பந்தர் இல்லம் 118 புள்ளிகளைப் பெற்று இவ்வருட வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

## சென். ஜோன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், செவ்வாய்

சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற பாஸ்கெட்போல் இறுதிப் போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி 54 – 16 புள்ளிகளால் வெற்றி பெற்றது இப்போட்டி சென், பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது திருவாளர்கள் ஏ பாலசிங்கம் பரமானந்தம் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர். திரு ஆர் ஜே துரைராஜா வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்கினர்,

——

## விளையாட்டுக்கழக ஆண்டுவிழா

சாவகச்சேரி, புதன்

'எமது மத்தியில் நிலவிவரு வேற்றுமைகளை மறந்து கிராமத்தின் முன்னேற்றத்திற்கு நாம் ஒன்றுபட்டு ஒத்துழைப்பதற்கு விளையாட்டுக் கழகங்கள் பெரும் உதவிபுரிகின்றன" என்று பூநகரி தபால் நிலைய அதிபர் திரு எஸ் சிவலோகசுந்தரம் பூநகரி காப்டன் தோட்டத்தில் நடைபெற்ற ஆறுமுகம் விளையாட்டுக்கழக ஆண்டுவிழாவிற்குத் தலைமை வகித்துப்பேசுகையில் கூறினர்.

பூநகரிப் பகுதிகாரியாதிகாரி திரு கந்தையா பேசுகையில் இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு தன்னால் இயன்ற உதவிகளை அளிப்பதாக உறுதயளித்தார்.

விவசாயப் போதனாசிரியர் திரு குக், திருசி. கிருஷ்ணசாமி உட்படப் பலர் சொற்பொழிவாற்றினர். ——

## டாக்டர்கள்-மந்திரி சந்திப்பு

பம்பலப்பிட்டி, செவ்வாய்

மருத்துவ நிபுணர் சங்கத்தினரும், அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினரும், சுகாதார மந்திரியைச்சந்தித்து மருத்துவக் கவுன்சிலின் விதிகளுக்கு எவ்வாறு திருத்தங்கள் கொண்டுவரவேண்டும் என்பதுபற்றிக் கலந்தாலோசித்தனர்,

திருத்தங்களை ஆராய்ந்த பின்னர் மந்திரி சபையின் கவனத்திற்கு இச்திருத்தங்களைத் தாம் விரைவில் சமர்ப்பிப்பதாக மந்திரி கூறியுள்ளார்.

——

## 90 லட்சத்திற்கு மிளகாய் இறக்குமதி

பம்பலப்பிட்டி, செவ்

சென்ற வருடத்தில் நடந்த இறக்குமதி செய்யப்படும் செத்தல் மிளகாயின் தொகை அதிகரித்துள்ளது என்பதை விவசாய இலாகா தற்பொழுது கண்டுபிடித்துள்ளது. 90 லட்சம் ரூபா பெறுமதியான மிளகாய் இறக்குமதி செய்யப்பட்டது.

1963-ம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட தொகையையே வருங்காலத்தில் இறக்குமதி செய்யவேண்டுமென்று

# வரி விளம்பரம்

தவிட்டுப் பிடிப்புகள கைக்குத்து அரிசியில் இடித்த வறுத்தெடுத்த கலப்பற்ற மா. யாழ்ப்பாண பார்மஸி, 91, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 674

**தேவை**

கைக்குத்து அரிசிமா கொண்டு திரிந்து விற்பதற்கு ஆட்கள் தேவை. நேரில் வரவும். யாழ்ப்பாண பார்மஸி பெரியகடை. 673

32 வயதுக்குட்பட்ட, இயந்திரப்பயிற்சியாளர்கள் தேவை. ஆகக் குறைந்த தகைமைகள் தொழில் நுட்பக் கல்லூரியின் எழுத்து, பயிற்சித் தராதரமுகணிதம், பௌதீகம் ஆகியவற்றில் க. பொ. த, ப. (சாதாரணம்) சித்தியும், கனிஷ்ட தொழில் நுட்ப வல்லுநர் விரும்பத்தக்கவர். விண்ணப்பிக்கவும். த பெ இல 694 694

பயிற்சி பெற்ற மிகத்திறமையான பெண் சேவகர்களுக்கு நான்கு இடமிருக்கின்றன, 12-8-65-ந் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும் விடுதிவசதிகள் யாவும் கொடுக்கப்படும், கௌரவ காரியதரிசி சேவா துன்பநிவாரணநிலையம், 82, கொழும்புத்துறை வீதி, கண்டிக்குளி, 693

விற்பனையாளர்: விண்ணப்பதாரர் தமிழ் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையில் ஆங்கிலத்துடன் அல்லது ஆங்கில சி. பா, த. ப. பரீட்சையில் தமிழுடன் சித்தியடைந்தவராகவும், சேவானுபவம் உள்ளவராகவும், வயது 21-30க்கு இடைப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். மாதவேதனம்: ரூபா 70/-ம், 33 1/3% சுற்கான வாழ்க்கைச் செலவும் கீழ்க்குறிப்பிட்ட விலாசத்திற்கு 10-8-65ம் திகதிக்கு முன் விண்ணப்பம் அனுப்பப்படல்வேண்டும்.

(து. சீனிவாசகம்) கௌரவ காரியதரிசி, யாழ்ப்பாண ஐக்கிய சேவா சங்கங்களின் சமாசம், 10/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 702

சரவணை-வேலணை மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு ஓர் உதவி மனேச்சர் தேவை, வயது 32க்குமேல், வர்த்தகவியல், ஆங்கில அறிவு, வியாபார அநுபவம், இத்தகைமையுடையவர்கள் 10-8-65க்குமுன் பதிவுத்தபால் மூலம் காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும், கூட்டுறவுப் பயிற்சிற்கு மதிப்புண்டு, ரொக்கப்பிணை ரூபா 1000/-, ஆதன அல்லது இன்சூறன்ஸ் பிணை ரூபா 2000/-. சம்பளம் யாவுமுட்பட ரூபா 150-225. (வருடம் 60/- ரூபா வீதம் 15 வருடங்களில்). டி. சங்கக் காரியதரிசி, வேலணை P O. 703

## கைதிகளுக்கு சலுகை

பம்பலப்பிட்டி, செவ்

சிம்மாசனப் பிரசங்கத்தில் தேசிய அரசாங்கம் தெரிவித்தபடி நீண்டகாலம் தண்டனைக்குட்பட்ட குற்றவாளிகள் நன்னம்பிக்கையின் பேரில் விடுவிக்கப்பட்டுச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் எனத் தெரியவருகிறது.

இதற்கான விபரமான திட்டங்களை நீதியமைச்சு ஆராய்ந்துவருகிறது,

20 வருடங்கள் தண்டனை விதிக்கப்பட்டு 10 வருடம் தண்டனை அநுபவித்தவர்களும் 14 வருடங்கள் தண்டனை விதிக்கப்பட்டு 7 வருடங்கள் தண்டனையை அநுபவித்தவர்களும் இச்சலுகைகளுக்கு உரியவர்களாவார்கள்.

விவசாய மந்திரி காரியாலயத்தினர் முடிவு செய்துள்ளனர்.

**விற்பனைக்கு**

கட்டுமரத்துக்கு வேண்டிய அல்பிசையா மரம். இதில் இரு சாதி உண்டு. ஒன்று பாரமுள்ளது, மிதவை குறைவு. மற்றது பாரம் குறைவு, நல்ல மிதவை உள்ளது. மிதவையன மரம் 6 முழத்திலிருந்து 11 முழம் வரை கம், கைவசம் இருக்கின்றது. கீழ்க்காணும் விலாசத ரவைக் கண்டு பெற்றுக்கொள்ளலாம், விலை மலிவு. K. S. நற்குணம், தொண்டமானறு. 698

**வீடு வாடகைக்கு**

வடமேற்கு கிழக்கில் பலாலி— யாழ்ப்பாண ஜேட்டுக்கருகாமையில் நவீன வசதிகளுடன் ஒரு வீடு 1-8-1965 தொடக்கம் நியாயமான வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது. விரும்பினோர் பின்வரும் விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். த. தம்பித்துரை, வருத்தலைவிளான், தெல்லிப்பளை. 672

**இடமாற்றம்**

உரும்பிராயில் இருந்த சித்த ஆயுர்வேத டாக்டர் S A. இராசையா L.I.M., ஆவணி முதல் நல்லூர் செம்பியன் ஒழுங்கை 174 ம் நம்பர் வீட்டில் வசிப்பார், வைத்தியம் செய்யவேண்டியவர்கள் கலந்துகொள்ளலாம் 657

**வைத்தியம்**

சலரோகம், தொய்வு, வாதம், கிரந்தி, நீட்டு இளைத்தல், புத்திரக்பேறு, தகுந்த முறையில் வைத்தியம் செய்பவர். பொ, செல்லையா, வைத்தியர், கந்தர்மடம் யாழ்ப்பாணம். 686

**WANTED**

Wanted Machanical Foreman with at least ten years experience in Motor Machanism and administration in recognised gares: apply in person to Winslows Jaffna. 704

## சமாதான ஞாபக முத்திரை

பேர்லின், ஜூலை 27

ஜூலை 17ந் தேதி முதல் 20ந் தேதிவரை பின்லாந்து தலைநகரான ஹெல்சிங்கியில் உலக சமாதானக் காங்கிரஸ் நடைபெற்றதை முன்னிட்டு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு இரு விசேட தபால்தலைகளை வெளியிட்டது. நாலு புறாக்கள் நான்கு திசைகளிலும் புறப்பட்டு கோளத்தை நோக்கிப் பறப்பதும், பின்லாந்து தேசியக்கொடியும் இந்தத் தபால் தலைகளில் சித்தரிக்கப்பட்டுள்ளன.

## "வியட்நாம் போக தயார்"

டோக்கியோ, ஜூலை 27

வியட்நாம் சென்று வியட்காங் படையினருடன் சேர்ந்து போரிடுவதற்கு தமது இராணுவம் தயாராக விருப்பதாக அணுக்குண்டு தடை பற்றிய சர்வதேச மகாநாட்டில் இந்தோனேஷிய பிரதிநிதி திருமதி உத்தாமி அரித்தாமா தெரிவித்தார்.

ஜனாதிபதி சுகர்னோ உத்தரவு இட்டால் போதும் உடனே படைகள் வியட்நாமுக்கு போய்விடும்" என்று அவர் தெரிவித்தார். இப்பொழுது இந்தோனேசிய வியட்நாமுக்கு வைத்திய குழுப்புகள் உதவி செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# பற்களை சுத்தமாக . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பதையும் விட, உண்ணும் உணவையும் தகுந்த முறையில் மென்று அரைப்பதற்கும் உதவுகின்றன. பல் கட்டாவிடில் கீழ்வாய் கூடுதலாக மூடப்படும். இதனால் அலகுப் பூட்டுக்களில் சில வருத்தங்கள் ஏற்படக்கூடும்.

பற்சிதைவு இல்லாத ஒருவரைக் காணுவது மிகவும் அருமையாக இருக்கும். பல்லில் தோன்றும் சிதைவு எதுவும் வெளியிலிருந்தே ஆரம்பிக்கின்றது. உணவை உட்கொண்ட பிறகு பற்களின் ஈறுகளில் தங்கியிருக்கும் பழுதடைந்த உணவில் உற்பத்தியாகும் அமிலங்களினால், முதலில் பற்சிப்பியும் கலவினமான பாகமும் தாக்கப்படுகின்றது. பற்சிப்பி சிதைவுற்றவுடன், இதற்குக் காரணமாகவுள்ள கிருமிகள் அடுத்து இருக்கும் வைரமான பகுதியையும் தாக்குகின்றன. இப்படியிருக்கும்பொழுது பல் ஈறுகளில் உணவு பொருட்கள் ஒட்டிக்கொள்கின்றன. இவை ஒட்டிக்கொள்ளாவண்ணம் அடிக்கடி வாயைத் தண்ணீரினால் கொப்பளித்துச் சுத்தம் செய்து கொள்வதால் இவ்வித ஆபத்துக்களைத் தடுக்கலாம். சிதைவுற்ற பல்லை அடைப்பித்துக் கொள்ளாமல் கவனமெடுக்காமல் இருக்கால், பற்சிதைவு கூடி பல்வலி ஏற்படும். சீழ் திரம்பிக் காணப்படும். இச்சீழ் பல்வேர்களுள் வழிந்து சீழ்க்கட்டி உண்டாகின்றது. தொற்று ஏற்பட்ட பல்லிலிருக்கும் இச்சீழ்க்கட்டியிலிருந்து சீழும் இரத்தமும் வாய்க்குள் வழிந்தவுடன் பல் வலி உண்டாகின்றது. பல்விரணம் (டல்பேத்தை) தோன்றிவிட்டதென்றால் அது பிடுங்க வேண்டிய ஒரு பல்லுக்கு அறிகுறியாகும்.

கடைவாய் கடைசிப் பல் முளைக்கும்போது சில சமயங்களில் அதிக கஷ்டத்தைக் கொடுக்கும். சாதாரணமாக பதினெட்டு (18) வயதுக்குமேல் இருபத்தைந்து (25) வயதுக்குள் அது முளைக்கும். சிலருக்கு தம் வாயைத் திறக்க முடியாதவண்ணம் வீக்கமும் ஏற்பட்டுவிடும். வலியும் உண்டாகும். கவனிக்காமல் விட்டுவிட்டால் அபாயம் நேரலாம். அபாயம் வராமல் பாதுகாக்க உத்தமமான வழி, உடனே பல்லையும், ஈயிற்றையும் பல் வைத்தியரிடம் காட்டுவதுதான்.

கருவுற்றிருக்கும் பெண்கள் தங்களுடைய தேக சுத்தத்தைப் பாதுகாப்பதோடு பல்லையும் கவனித்துக்கொள்ளவேண்டும். அவர்கள் கர்ப்பத்திலிருக்கும் குழந்தைகளின் பல் சரிவர இருப்பதற்கு அப்படிச் செய்வது அவசியம். பல்லையும் முரசையும் நன்குப் பரிசோதித்து ஏதேனும் குறையிருந்தால் நீக்கி சுத்தமாகவும் சுகமாகவும் வைத்திருக்கவேண்டும். இக்குழந்தைகளின் பற்களையும் சிறுவயதிலேயே பரிசோதனை செய்யவேண்டும். அப்பொழுதுதான் பற்சிதைவு, இரத்தம் முரசில் கசிதல் முதலிய வருத்தங்களை வராமல் தடுக்கலாம். எயிறுகளை அழுத்தி மசாச் செய்தல், சமநிலையும் சத்துள்ள உணவுகளை அருந்துதல், வாயைச் சுத்தமாக்கி வைத்துக்கொள்ளல் ஆகியவை பல் நோய்கள் வராமல் காக்கும் விதிகள். தித்திப்புப் பண்டங்களையும் மிருதுவான உணவுகளையும் விலக்குதல் வேண்டும். நாகரிகம், முன்னேற்றம் அடைந்த நாடுகளில் இந்த இரண்டினாலும் பல் கெடுவது அதிகமாகவருகிறது. தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குப் போதுமான பால் ஊட்டி வளர்த்தல் மிகவும் முக்கியம்.

ஊன் சத்து, உயிர்ச் சத்து, உப்புவகை இவை அதிகமாக உள்ள உணவுகளைத் தாயும் சேயும் சாப்பிடவேண்டும். பலமான பற்கள் உண்டாவதற்குக் காரணம் அதுதான் உண்டு. 'சி' வைட்மின் குறைவாக இருந்தால் முரசு பெருத்து இரத்தம் கசியும். தோடம்பழம், நெல்லிக்காய் ஊளவுக்குக் குணப்படுத்தும் சக்திவாய்ந்தது. பசுப்பால், தாய்ப்பாலுக்கு அடுத்தபடி சிறந்தது. பல் வளர்ச்சி பெறும்பொழுதும் பல்லுக்குப் பலம் உண்டாவதற்கும் Ca மும், Ph சும், A D C வைட்டமின்களும் அத்தியாவசியம். ஆனபடியால் குழந்தைகளுக்கு இச்சத்து நிறைந்த உணவுகளைக் கொடுக்கவேண்டும்.

புற்றுநோய் அநேகமாக 30 அல்லது 40 வயதுக்குப் பின் தோன்றும். இலங்கையில் 50 சத விகிதத்துக்கு மேல் இந்நோய் வாயிலேயே காணப்படுகின்றது. பல் வைத்தியரிடம் இந்நோயுள்ள பலர் முதல் முதலாகத் தங்கள் கஷ்டங்களை சொல்வார்கள். புகையிலை சுண்ணாம்பு போன்றவற்றால் உண்டாகும் அழற்சி காரணமாக அதிகமாக வெற்றிலை போடுவோருக்கு நாக்கில் அல்லது சொக்கில் புற்றுநோய் தோன்றுகின்றது. அதேவிதம் கூருள்ள அல்லது பழுதுள்ள பல்லினால் அல்லது நன்கு பொருந்தாத பற்கட்டினால் உண்டாகும் அழற்சி புற்றுநோயை வருவிக்கும்.

### புற்று நோயின் முதலறிகுறிகள்

1 வாயில், நாக்கில், சொக்கில் அல்லது உதடுகளில் உண்டாகும் புண் இரண்டு மூன்று கிழமைகளில் மாறாமை

2 விழுங்குவதில் வில்லங்கம்

3 நீண்டகாலக் குரலடைப்பு

4 முதலில் நோ உண்டாவதில்லை. இந்த அறிகுறிகள் காணப்படுமாயின் உடனே பல் வைத்தியரிடம் காட்டினால் அவர் ஆகவேண்டிய ஒழுங்குகள் செய்வார்.

---

## புத்தளப் பகுதி : : :

(4-ம் கலத் தொடர்ச்சி)

மாட்டார்களென்றும், இவ்விஸ்தரிப்பால் மீனவர்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்பட மாட்டார்களென்றும் உதவி நீதிமந்திரியமைச்சர் தெரிவித்தார், புத்தளம் ஏரியில் பால் மீன்களை வளர்க்கும் ஒரு திட்டத்தையும் அமைச்சர் பரிசீலித்தார்.

இறுசேவையாளர்க்காக கட்டப்படும் வீடுகளையும் அவர்கள் வசதிகளையும் பார்வையிட்ட அமைச்சர், எதுவிதசதியிலும் இவ்வீடுகள் இந்த நிதி வருடத்துள் கட்டப்பட்டு முடிய வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

---

## நாட்டிலும் . : : .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிதுர் கடன்களையும் இங்கே முடித்துக்கொள்வார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் கூடும் இந்தத் தீர்த்தக் கரையைக் கூடியவரையில் சுத்தமாக வைத்திருக்க வேண்டியது அங்கு செல்பவர்கள் எல்லோரினது கடமையுமாகும். முந்திய வருடங்களில் தீர்த்தத்தை அடுத்துள்ள கடற்கரை, அசுத்தப்படுத்தப்பட்டு நாற்றமெடுப்பதை 'வழிப்போக்கன்' கண்டு வருத்தப்பட்டிருக்கிறான். ஆண்களுக்கென்றும் பெண்களுக்கென்றும் தற்காலிகமாக மலசல கூடங்கள் அமைக்கப்பட்டிருந்தாலும், சட்டதிட்டங்களை மீறுவதில் ஆனந்தமடையும் சில காடையர், அவைப்புகளுக்கு வெளியே யுள்ள சுத்தமான வெண்மணலை அசிங்கப்படுத்துவதைப்பார்க்க மனம் புழுங்கும். நல்லூர், கதிர்காமம் முதலிய இடங்களில் நடப்பதுபோல், இளைஞர்கள் தொண்டர் படைகளைக் கூட்டி, தீர்த்தக் கரையைப் புனிதமாக வைத்திருக்க முன்வரவேண்டும்.

—வழிப்போக்கன்

---

## ஆயுர்வேத ஆராய்ச்சி நிலயம்

கொழும்பு, செவ்வாய்

நாவின்னையிலுள்ள ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையம் குறித்து விசாரணை நடத்த தான் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக தம்மைப் பேட்டி கண்ட அரசாங்க எம்பிக்களிடம் மந்திரி தெரிவித்தார்.

காலஞ்சென்ற இந்தியப்பிரதமர் திரு நேரு திறந்துவைத்த பின்னர் இந்த நிலையம் செவ்வனே இயங்கவில்லை என அரசாங்க எம் பிக்கள் தமக்கு முறையிட்டுள்ளதாக மந்திரி தெரிவித்தார்.

---

## இப்படியும் நடந்தது

கொள்ளுப்பிட்டி, செவ்

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன விசாரணைக் கமிஷன் இன்று காலை கூடிய பொழுது முடிக்குரிய வழக்கறிஞர் திரு. பேர்ஸி கொலின் தொம்மே ஒரு சுவையான தகவலை வெளியிட்டார்.

"அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு முன்னர் கூ. மொ. விற்பனவு ஸ்தாபனத்திலுள்ள சில காலியான இடங்களுக்கு விண்ணப்பித்திருந்தவர்களில் இரு பெண்களும் ஒரு ஆணும் தங்களது விலாசத்தை 'அலரி மாளிகை' என்றும் 'இராணி மாளிகை' என்றும் குறிப்பிட்டிருந்தனர்" என்று திரு. பேர்ஸி கொலின் தொம்மே தெரிவித்திருந்தார்.

---

## சாரணரின் தீரச்செயல்

யாழ்ப்பாணம், புதன்

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் அருகே நேற்று மாலை 8 மணியளவில் ஒரு வீட்டில் தீப்பற்றிக் கொண்டது. பாடசாலைச் சாரணர்களின் உதவியால் உயிர்ச்சேதமோ பொருட்சேதமோ எதுவுமின்றி தவிர்க்கப்பட்டது. இவ்வுதவியின் மூலம் இரண்டு சாரணருக்குக் காயமேற்பட்டது. அவர்கள் அதையும் பொருட்படுத்தாது உதவி செய்தனர். இவர்களது சேவையைப் பொலிஸார் பாராட்டினர்.

---

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் 7-ம் திருவிழாவான இன்று மாலை 6-மணி முதல் 7-30 மணிவரை திரு. சி. எஸ். எஸ். மணி பாகவதர் மகாபார பிரசங்கத் தொடரை நிகழ்த்துவார்.

---

## பிரதமரைச் சந்தித்தனர்

அம்பலாங்கொடை, செவ்வாய்

மீனை மிகவும் குறைந்தவிலையில் மக்களுக்கு விற்க வேண்டும் என்பதில் அரசாங்கம் அக்கறை கொண்டுள்ளது. தற்பொழுது மீன்வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள எவரையும் மீன்பிடிக் கூட்டுஸ்தாபனம் பாதிக்காது. அத்துடன் கடலில் செல்லும் மீனவராகவிருந்தாலும் சரி அல்லது கடற்கரையில் மீன் வாங்கும் முதலாளியாகவிருந்தாலும் சரி, என்று பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயக்கா 'அலரிமாளிகை'யில் சந்தித்த அகில இலங்கை மீன்வியாபாரிகள் சங்க தூதுகோஷ்டியினரிடம் தெரிவித்தார்.

---

## டில்லியில் பூமா

புதுடில்லி, ஜூலை 27

லாவோஸ பிரதம மந்திரி இளவரசர் சுவர்ணபூமா, டில்லிக்கு 2 நாள் விஜயத்தை மேற்கொண்டிருக்கிறார்.

---

### காலியான.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குமாஸ்தாக்கள், மெக்கானிக்கர்கள்.

இப்பதவிக்கான தெரிவுகள் தகுதிகாண் பரீட்சைகள் மூலம் நடைபெறும்.

---

# புத்தளப் பகுதி உப்பளங்களுக்கு கைத்தொழில் மந்திரி விஜயம்

புத்தளம், செவ்

கைத்தொழில் மீன்பிடி மந்திரி திரு. பிலிப் குணவர்த்தனவும், அவரது பாராளுமன்றக் காரியதரிசி திரு. செல்டன் ஜயசிங்காவும், புத்தளம் பிரதிநிதியும், உதவி நீதியமைச்சருமான ஜனாப். எம். ஏச். எம். நயினா மரிக்கார், நிரந்தரக் காரியதரிசி ஜே. வல்பிற்ற, உப்புக் கமிஷனர் ஜே அமிர்தநாயகம் ஆகியோருடன் புத்தளம் — பாலாவி உப்பளங்களைப் பார்வையிட்டார்.

உப்பினால் செய்த மாலைகளும், தோரணங்களும் அலங்கரித்த பந்தல் வழியாக அமைச்சர் முதலில் பாலாவி உப்பளத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். உப்பளத்தைச் சுற்றிப்பார்த்த மந்திரி அங்குவேலை செய்யும் தொழிலாளர் நம்பர் பாதுகாப்புறைகள் அணிந்து வேலைசெய்வதையும், உப்பு மூடைகள் ஒழுங்கான சேதமில்லாத முறையில் உடனுக்குடன் தைக்கப்பட்டு, பாரந்தூக்கிகள் மூலம் புகைவண்டியில் ஏற்றப்பட்டு வெளியிடங்களுக்கு அனுப்பப்படுவதையும் கண்டு தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

கடந்த பங்குனி மாதம் 80,000 தொன் உப்பு உற்பத்தி செய்யப்பட்டதென்றும், கடந்த இருவாரங்களில் 20,000 தொன் உப்பு விளைவிக்கப்பட்டதென்றும் காலநிலை சீராக இருக்குமானால் இவ்வுற்பத்தியை மேலும் அதிகரிக்க முடியுமென்றும் புத்தளம் உப்பள அத்தியட்சகர் மந்திரியிடம் தெரிவித்தார்.

அடுத்து புத்தள உப்பள விஸ்தரிப்புத்திட்டத்தைப்பற்றி பரிசீலித்த அமைச்சர் இந்த விஸ்தரிப்புத்திட்டத்தால் மீனவர்கள் பாதிக்கப்படமாட்டார்களா என்று உதவி நீதியமைச்சரை வினவினார். புத்தளம் ஏரி மிக விரிவானதென்றும், உப்பள விஸ்தரிப்பில் சில ஏக்கர்களே பாவிக்கப்படுமென்றும், இவ்விஸ்தரிப்பால் மீனவர்கள் எதுவிதத்திலும் பாதிக்கப்பட

(2-ம் கலம் பார்க்க)

---

## புதிய ஜே. பி.

யாழ்ப்பாணம், புதன்

முனாயைச் சேர்ந்த திரு இராமசாமி தம்பையா யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிய சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார். முனாய் கூட்டுறவு சுலைத்தொழில் சங்கத் தலைவரும் மாவட்ட கூட்டுறவு மாகாண வங்கியின் மனேஜிங் டைரக்டரும் முனாய் மரணவிசாரணை அதிகாரியுமான திரு. இராமசாமி தம்பையா முனை ஐயனார் கோவில் மனேஜருமாவார்.

---

## இந்தியாவில் நதிகளின் சீற்றம்

புதுடில்லி, ஜூலை 27

இந்தியாவின் இரண்டு ராஜ்யங்களில் பல நதிகள் பெருக்கெடுத்துள்ளதால் சுமார் 500 குடும்பங்கள் வீடிழந்ததாகவும், 3000க்கு மேற்பட்டவர்கள் வீதிகளில் பாதுகாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரமபுத்திரா ஜோர்தான் நதிகளின் சீற்றம் சிறிதும் தணியவில்லை. பாதுகாப்பு வேலைகளில் 800 விமானங்கள் ஈடுபட்டுள்ளன. பல ஏக்கர் நிலங்கள் தண்ணீரில் அமிழ்ந்துவிட்டன. அஸாம் ராஜ்யத்தில் கோர்டன் நதிப் பெருக்கால் சுமார் 1650 பேர் வீடிழந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

பிரம்மபுத்திர நதி பெருக்கெடுத்தமையால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நெல் வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளன. முஜிபதா ஜில்லாவில் மட்டும் 800 குடும்பங்கள் வீடிழந்துள்ளன.

பீகார், அசாம் ஆகிய ராஜ்யங்களின் வற்புறுத்தலின் பெயரில் 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் வெள்ளத்தடுப்புக்கான நிதி அதிகரிக்கப்படும் உள்ளது.

---

கிரிக்கெட் டெஸ்ட்

## வெற்றி தோல்வியில்லை

லார்ட்ஸ், ஜூலை 27

தென்னாபிரிக்காவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே இங்கு நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் எவருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்திருக்கிறது.

முதலாவது கிரிக்கெட் டெஸ்ட்டில் இங்கிலாந்து வெற்றி பெறுமென்று ரசிகர்கள் எதிர்பார்த்திருந்த பொழுதிலும் கடைசி நேரத்தில் தென்னாபிரிக்காவின் துரித விளையாட்டினால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ஸ்கோர்விபரம்

தென்னாபிரிக்கா, முதல் இன்னிங்ஸ்: 280 இரண்டாம் இன்னிங்ஸ்: 248

இங்கிலாந்து முதல் இன்னிங்ஸ்: 338. இரண்டாம் இன்னிங்ஸ் ஏழு விக்கட்டுக்கள் கஷ்டத்துக்கு 145 ஓட்டங்கள்.

---

## இன்றும் நாளையும்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சபாநாயகர் சேர் அல்பர்ட் பீரிஸ் தலைமையில் இன்று பிற்பகல் ஜனப்பிரதிநிதிகள் சபை கூடியது.

கல்வி மந்திரி மீது கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்றும் நாளையும் விவாதிக்கப்படுவதாகவிருந்தது அரசாங்க அலுவல்கள் பல இருப்பதால் தனியார் தினமான நாளை புதன்கிழமை மட்டும் அப்பிரேரணைமீது விவாதம் நடைபெறுமென ராஜாங்க மந்திரி இன்று சபையில் தெரிவித்தார்.

இதை ஆட்சேபித்துதோம்பே பிரதிநிதி (ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி) திரு பீலிக்ஸ் ஆர் டயஸ் பண்டாரநாயக்கா பிரேரணையில் கட்சித் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது கல்வி மந்திரி மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதிப்பதற்கு இரண்டு தினங்களை ஒதுக்குவதென்று உடன்பாடு ஏற்பட்டதாகவும் இந்த உடன்பாட்டை இப்பொழுது மீறுவதனால் பாராளுமன்றக் கட்சித் தலைவர்களுக்கிடையிலான சம்பிரதாயத்தை இனிப் பின்பற்ற வேண்டிய அவசியமேற்படாதென்றும் கூறினார்.

"விவாதத்திற்கு இரண்டு தினங்கள் ஒதுக்கப்பட்டது. இதை மீறி ஒரே ஒரு தினத்தை ஒதுக்குவதை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம்" என்று திரு பீலிக்ஸ் கூறினார்.

'ஜனநாயகம் சரியான முறையில் இயங்குவதற்கு எதிர்க்கட்சி அவசியம் என்பதை மறந்துவிடாதீர்கள். நீங்கள் முன்பு எதிர்க்கட்சியில் இருந்த பொழுது விவாதத்துக்குத் தினங்கள் ஒதுக்குவதில் உங்கள் கோரிக்கைகளை நாங்கள் ஏற்று நடந்திருக்கிறோமென்பதையும் நினைவில் கொள்ளுங்கள்" என்று திரு. பீலிக்ஸ் கூறினார்.

திரு. பீட்டர் கெனமன் (கம்யூனிஸ்ட்) பேசுகையில், ராஜாங்க மந்திரி (திரு. ஜே ஆர். ஜயவர்த்தன) தாம் நினைத்த மாதிரி நடந்துகொள்ள முனைகிறாரென்றும் இந்த அரசாங்கம் அளித்துவரும் சங்கீதத்தொடரான வாக்குறுதிகள் என்ன நிலையை அடைந்துவருகிறதோ அதே நிலைதான் நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு ஒதுக்கப்பட்ட இரு தினங்கள், ஒரு தினமாக மாறுவதுமாகும் என்று கூறினார். அரசாங்கத்தினர் இவ்விதம் தமது வாக்குறுதிகளை மீறி நடப்பதாயிருந்தால் பார்லிமெண்ட் அலுவல்களில் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு அளிப்பதில் எவ்வித பயனும் இல்லையென்றும் திரு. பீட்டர் கெனமன் கூறினார்.

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலே வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.